Registered as a Newspaper

யாழ் நகரில்
நினைவில் வைத்திருங்கள்
★ அன்பான உபசரிப்பு
★ குறைந்த விலை
★ சுவை மிகுந்த உணவு வகைகள்
நாடுங்கள்:
R.S.R. Green Peking Palace
4th Cross Street.
JAFFNA.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை: ரூ 1-25

இந் நெருக்கடியான நிலையிலும்
Lunch packets 12/50
Hot-Dogs 10/-
Ice Cream 6/-
Chinese Roll 3/50
Chilled Beer 34/-
மேலதிகக் கட்டணங்கள் இல்லை.
R.S.R.
Green Peking palace
4th Cross Street,
JAFFNA,

மடல்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு மாசி மீ 8 உ. வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமா ஆகிர் பிறை 21 (20-02-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY இதழ் 73

### படுகாயம்

நெடுங்கேணி பெப். 20

முல்லைத்தீவு குறிசுட்டகுளம் என்னும் இடத்தில் அண்மையில் பாதுகாப்புப் படையினர் ஹெலிக்கொப்டரில் இருந்து நடத்திய தாக்குதலில் மாவட்ட அபிவிருத்தி சபையின் முன்னாள் உறுப்பினர் திரு வி. தெய்வேந்திரம் (வயது 40) படுகாயமடைந்தார்.

நெடுங்கேணியில் இருந்து சன்னாசிபரந்தனுக்குச் சென்று கொண்டிருக்கையில் இவர் ஹெலித்தாக்குதலுக்கு இலக்கானார்.

தற்போது இவர் நெடுங்கேணி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (உ-108)

### சுபநேரம்

20—02—1987

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
6-33 முதல் 8-03 வரை

ராகுகாலம்:
11-02 முதல் 12-32 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

வன்செயலை நிறுத்தி சிவில் நிர்வாகத்தை கைவிட்டால்

# புலிகளுடன் நேரடிப் பேச்சுக்கு அரசு தயார் என்கிறார் ஜே. ஆர்.





## ★ போர்நிறுத்தம் ★ போராளிகளுக்கு மன்னிப்பு ★ பொருளாதாரத் தடை நீக்கம் ★ 86 டிச.19 சமாதான திட்டத்தை ஏற்றல் ★ இராணுவ நடவடிக்கை நிறுத்தம்

கொழும்பு, பெப். 20

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொருட்டு, இந்திய அரசின் பிரசன்னத்தில், தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தமது அரசாங்கம் தயாராக உள்ளதாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று அறிவித்தார்.

நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரை ஆரம்பித்துவைத்து உறையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இன்றைய நெருக்கடி நிலைமையை தணிப்பதற்குரிய தமது ஆறு அம்சத் திட்டத்தையும் அவர் அப்போது வெளியிட்டார்.

பிரஸ்தாப திட்டத்தைத் தாம் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்குத் தெரியப்படுத்தி இருப்பதாகவும் அவர் சொன்னார்.

1. இந்தியாவின் பிரசன்னத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்த நாம் தயார்.

ஆனால், அதற்ாக புலிகள் இபக்கம் வன்செயல்களை நிறுத்தவும், சிவில் நிர்வாக நடவடிக்கைகளைக் கைவிடவும் இணங்க வேண்டும்

2. புலிகள் இந்த இரண்டு நிபந்தனைகளையும் ஏற்றால் போர் நிறுத்தம் ஒன்றைச் செய்வதற்கும் அரசு தயார்

வடக்குக் கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.

3. போர்நிறுத்தம். அமுலுக்கு வந்ததும் யாழ்ப்பாணம் குடா நாட்டின் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் நீக்கப்படும்.

4 போராளிகள் ஆயுதங்களைக் கீழே வைத்து போர் நிறுத்தத்துக்கு இணங்கினால் வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் சகல தமிழ் இளைஞர்களும் விடுவிக்கப்படுவர்.

5 1986 டிசம்பர் 19ஆம் திகதிய நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டு அதிலிருந்து பேச்சுக்களை நடத்தி பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு எனது அரசாங்கம் உறுதிபவிக்கிறது.

பேச்சுக்களை டில்லியில் நடத்தவும், அதற்குரிய மிக முந்திய பொருத்தமான திகதியை நிர்ணயிக்கவும் அரசு ஆவலாக உள்ளது

பேச்சுவார்த்தையின் பலனாகச் செய்யப்படும் ஒப்பந்தம் எதனையும் அமுல் செய்ய அரசு பொறுப்பு ஏற்கிறது

தீர்வுக்கான இணக்கம் ஏற்பட்டதும் போராளிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படும்.

6. இந்தப் பேச்சுவார்த்தைகளிலும் அதன் பெறுபேறுகளை அமுல் செய்வதிலும் இந்தியாவின் மத்தியஸ்தத்தை - பங்களிப்பை எல்லாக் கட்டத்திலும் அரசு வேண்டி நிற்கிறது.

திரு. ஜெயவர்த்தன மேலும் சொன்னதாவது; தமிழ் மக்கள் மீதான இராணுவ தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும். வட பகுதி மீதான பொருளாதாரமுற்றுகை நீக்கப்பட வேண்டும். அப்போது தான் தமிழ்ப் போராளிகளுடன் இந்தியா பேச முடியும். இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி எனக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தார்.

இவைகள் நிறைவேற்றப்படாவிட்டால் வன்செயல்கள் நீடிக்கும்; மேலும் உக்கிரமடையும் என்றும் திரு. காந்தி கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இக் கடிதத்துக்கு நான் பெப்ரவரி 13இல் பதில் அனுப்பினேன். (அ-எ)

### உலக இந்து மாநாடு

காத்மாண்டு பெப். 19

உலக இந்து மாநாடு 1988 மார்ச் மாதம் நேபாளத்தில் நடைபெறும்.

மாநாட்டுத் தலைவர் திரு நாகேந்திர பிரசாத் ரிஜால் இதனைத் தெரிவித்தார். (இ-எ)

### ஊழியர் இடைவழியில் திரும்பினர்

யாழ்ப்பாணம், பெப் 20

யாழ் கோட்டைக்குள் இருக்கும் வங்கிகள், தபால் கந்தோர் ஆகியவற்றுக்கு நேற்று கடமைக்குச்சென்ற ஊழியர்கள். இடைவழியில் திரும்பிவந்தனர்.

கோட்டை முகாமில் இருந்து கடற்பகுதியை நோக்கி நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்டதுப் பாக்கிப் பிரயோகம் காரணமாக பீதியினால் ஊழியர்கள் கடமைக்குச்செல்லாது திரும்பினர் (உ-10)

### பிரபுக்கள் சபை வழங்கிய தீர்ப்பால் அகதிகள் பாதிப்பு

லண்டன், பெப். 19

ஒருவர் அகதியா இல்லையா என்பதை நீதிமன்றம் தீர்மானிக்க முடியாது. ஆனால் ஒரு அகதியின் விடயத்தில் உள்துறை அமைச்சு நியாயமாக நடந்து கொண்டதா? இல்லையா என்பதை மட்டும் நீதிமன்றம் தீர்மானிக்க முடியும்.

இப்படி பிரிட்டனின் அரசியல் விவகாரம் தொடர்பான மிக உயர்ந்த முறையீட்டு நீதிமன்றமான பிரபுக்கள் சபை (House of Lords) இன்று தீர்ப்பளித்திருக்கிறது.

ஈழத் தமிழ் அகதிகள் 58 பேரில் ஒருவரின் மனுத் தொடர்பாக பிரபுக்கள் சபை நேற்று அளித்த தீர்ப்பிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரபுக்கள் சபையின் இந்தத் தீர்ப்பு லண்டன் வாழ் அகதிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என ஈழத்தமிழ் அகதிகளின் சார்பில் நீதிமன்றத்தில் வாதாடி வரும் சட்டத்தரணி டேவிட் பேர்சஸ் தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

### சைக்கிளில் சென்றவர் மீது சிப்பாய் சூடு

யாழ்ப்பாணம், பெப். 20

சைக்கிளில் சென்றவர்கள் மீது சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதன் காரணமாக ஒருவர் காயமடைந்தார். சைக்கிளும் சேதமானது.

நேற்றுப் பகல் யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் அலுப்பாந்திக்கு அருகாமையில் இச் சம்பவம் இடம்பெற்றது

ஆர். பாலசிங்கம் (68 வயது) என்பவரே காயமடைந்தவராவார்.

ஏனையோர் காயமேதுமின்றி தப்பித்துக் கொண்டனர்- (இ-10)

### ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 20

நேற்றுப் பகல் பதினொரு மணி அளவில் கொட்டடிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டன எனினும் எவரும் காயம் அடையவில்லை. (இ-10)

திடமான செயற்பாடு தேவை:

## ஜே. ஆருக்கு கடிதம் அனுப்பும் நேரம் அல்ல இது!

சுப்பிரமணிய சுவாமி கூறுகிறார்

சென்னை, பெப். 19

இலங்கை ஜனாதிபதிக்கு தண்டுக் கடிதங்களை அனுப்பிக்கொண்டிராமல் இந்தியா தீர்மானமாகச் செயல்படவேண்டிய காலம் இது.

இந்துஸ்தான் முன்னணியின் தலைவரும் லோக்தள் தலைவருமான டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி நேற்றுவாறு செய்தியாளரிடம் சொன்னார்.

இலங்கையில் அமெரிக்கா, இஸ்ரேவல், பாகிஸ்தான், தென்னுபிரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த கூலிப்படைகள் குவிந்துள்ளனர்.

இந்தியாவின் நலன்களுக்குப் பாதகமான சக்திகள் இவை.

இந்தியா தனது நலன்களைப் பாதுகாக்கவேண்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## பலாலியில் ஷெல் தாக்குதல்கள்

### இரு போராளிகள் காயம்

யாழ்ப்பாணம், பெப் 20

நேற்று பலாலி இராணுவ முகாமில் இருந்து ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டன.

ஷெல் தாக்குதல்காரணமாக இரண்டு போராளிகள் காயமடைந்தனர்.

போராளிகள் பதில் தாக்குதல் நடத்தினர். பின்னர் சிப்பாய்கள் தாக்குதலை நிறுத்திக் கொண்டனர்.

நேற்றுக் காலையில் நடைபெற்ற இத் திடீர் தாக்குதல் காரணமாக மக்கள் பெரும் பதற்றம் அடைந்தனர்.

பலாலி இராணுவ முகாமுக்கு விமானங்களும் ஹெலிக்கொப்டர்களும் வந்து தரையிறங்கும பொழுதே ஷெல் தாக்குதல்கள் மேற் கொள்ளப் படுவது வழக்கம். (உ-10)

ஈழத் தமிழருக்கு ஆதரவாக

## தூத்துக்குடியில் இன்று மறியற்போர்

தூத்துக்குடி, பெப் 19

யாழ் குடா நாடு மீதான பொருளாதார முற்றுகையை எதிர்த்து தூத்துக்குடி துறைமுகத்தில் இன்று வெள்ளி ஒருநாள் மறியல் நடைபெறவுள்ளது.

திராவிடர் கழகம், தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ் கூட்டாக இம் மறியலை நடத்துகின்றன.

பொருளாதார முற்றுகையை நீக்காவிட்டால் இந்தியாவில் இருந்து பொருள்கள் எதுவும் அனுப்பப்பட மாட்டாது என்று இலங்கைக்கு, பிரதமர் காந்தி கூற வேண்டும் என்று வற்புறுத்தியே இம்மறியல் போராட்டம் நடத்தப்படுகின்றது என்று திரு. கே, வீரமணியும் திரு. ப. நெடுமாறனும் கூட்டாக விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து ஆண்டு தோறும் சுமார் 30 கோடி ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் இலங்கைக்கு அனுப்பப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

அரசியல் தஞ்சம் கோரும்

## ஈழத்தமிழர்களை கனடா நாடு கடத்தமாட்டாது

### குடியகல்வு அமைச்சர் அளித்த உறுதி

கிங்ஸ்டன், பெப் 19

அரசியல் தஞ்சம் கோரும் ஈழத்தமிழர் நாடுகடத்தப்படமாட்டார்கள்.

கனேடிய தொழில் வாய்ப்பு, குடிவரவு குடியகல்வு அமைச்சர் திரு. பெனொய்ட் பௌச்சார்ட் முன்கண்ட உறுதிமொழியை வழங்கியிருக்கிறார்.

எதிர்வரும் ஏப்பரலில் மேற்கு ஜேர்மனியில் இருந்து சுமார் 250இலங்கைத் தமிழர் கனடாவுக்கு அகதிகளாக நுழைய விருக்கின்றனர் என்று மேற்கு ஜேர்மன் அதிகாரிகள் கனடாவை எச்சரித்து இருந்தனர்.

கனடாவின் 'டோரொன்டோ குளோப்' அன்ட் மெயில் நாளிதழில் இச் செய்தி வெளியானது.

இது பற்றிக் கேட்ட போதே அமைச்சர் முன் கண்ட உறுதிமொழியை அளித்தார்.

அமைச்சர் மேலும்

(4-ம் பக்கம் பார்க்க)

## அடகு வைத்தோர் சங்கத்தின் கடிதத்துக்கு ஜனாதிபதியிடமிருந்து பதில்

யாழ்ப்பாணம். பெப். 20

அடகு வைத்தோர் சங்கத்தினால் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட 4. அம்சக் கோரிக்கைகள் அடங்கிய கடிதத்துக்கான பதில் சங்கச் செயலாளருக்குச் கிடைத்துள்ளது.

ஏற்கனவே அறிவித்தபடி அடகு வைத்தோர் சங்க உறுப்பினர்களின் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10 00 மணிக்கு யாழ் வின்சர் திரையரங்கில் நடைபெறும் என்று அடகு வைத்தோர் சங்கம் அறிவித்துள்ளது.

இக் கூட்டத்தில் போராட்டத்தின் நிலைப்பாடு பற்றி சங்கத்தின் பொதுச் சபையால் அலசி ஆராயப்படும்.

முச்சந்தி மூனி



அடி உத்தமனூர் நல்லாய்ப் படி இறங்கி வந்திருப்பதாகத்தெரிகிறது! வடக்கு கிழக்கு இணைப்புக்கு இடம் கொடுக்காமல் எண்ட அடம் பிடிப்பையும் கைவிட்டார் எண்டால் மெத்த நல்லது----!

## இனப்பிரச்சினையினால் ஆளும் கட்சிக்குள் பிளவு

### மூன்று வெவ்வேறு பிரிவுகள்?

கொழும்பு, பெப். 20

இனப்பிரச்சினை குறித்து ஆளும் கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் மூன்றுபிரிவாக வலுவடைந்து வருகின்றனவாம்.

- இப்படி கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவத் தீர்வின் மூலம்தான் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டும் என்ற கடும் போக்குக் குழுவுக்கு இரண்டு அமைச்சர்கள் தலைமை வகிக்கின்றனர்.

இவர்களில் ஒருவர் கீழ் நாட்டுச் சிங்களவர் மற்றவர் மலைநாட்டுச் சிங்களவர்.

பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற பிரிவுக்கு ஒரு சிங்கள அமைச்சரும் ஒரு தமிழ் அமைச்சரும் தலைமை வகிக்கின்றனர்.

நடுநிலைமைக் குழுவில் தான் பெரும்பாலான அமைச்சர்கள் இருக்கின்

(4-ம் பக்கம் பார்க்க)

## சுவாஸிலாந்தில் மக்கள் அனைவருக்கும் 'எய்ட்ஸ்' நோய் சோதனை

பாபேன், பெப். 20

ஒரு நாட்டின் முழு மக்களும் அடுத்த மாதம் எய்ட்ஸ் நோய்த் தடுப்புப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட உள்ளனர்.

தென் ஆபிரிக்காவினால் சுற்றி வளைக்கப்பட்டுள்ள சுவாஸிலாந்து நாட்டில்தான் இது இடம் பெறவுள்ளது

சுவாஸிலாந்து மக்கள் எண்ணிக்கை 6 லட்சம்.

அங்கு இதுவரை இரண்டு பேருக்குத்தான் எய்ட்ஸ் நோய் காணப்பட்டது. அவர்களில் ஒருவர் வெளிநாட்டவர். (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

சேவை

மதிகன சண்டி பத்திரத்தை வழிவடுவதாக திருமணமாகாத வயது வந்த பெண்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறும். தாம்பத்திய உறவில் கசப்புடையோரும், குடும்பப் பிரிவுடையோரும் வழிபடலாம். இலவச விபரம் கட்டு முத்திரைக் கவர் அனுப்பிப் பெறலாம். க. சிவஷண்முகானந்தக் குருக்கள், சொல்லகலட்டி, தெல்லிப்பழை


# உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் ஏமாற்றம்!

## பலருக்கு எதிர்பார்த்த விளைச்சல் இல்லை

அச்சுவேலி, பெப். 20

வடபகுதியில் உருளைக் கிழங்குச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு எதிர்பார்த்த அளவு இம்முறை வருமானம் இல்லை.

இம்முறையும் யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு உள்ளூர் விதைஉருளைக்கிழங்கே வழங்கப் பட்டது.

இந்த விதை உருளைக் கிழங்கு வடபகுதி கால நிலைக்கு அதிக விளைச்சலைக் கொடுக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதனால் உருளைக்கிழங்குச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் பலர் அறுவடை செய்யும் போது ஏமாற்றத்திற்கு உள்ளாகினர்.

சில இடங்களில் விதை உருளைக்கிழங்காக பயன்படுத்திய அளவைக்கூட விளைச்சலாக பெற முடியவில்லை. அத்துடன் அறுவடை செய்யப்படும் கிழங்கும் தரமானதாகஇல்லை என்றும்கூறப்படுகிறது.

இதுபற்றி அச்சுவேலி பகுதி பயிர்ச் செய்கை அதிகாரி திரு என். மதனசேகரம் கருத்து தெரிவிக்கையில் 'உருளைக்கிழங்கு செய்கையில் காணப்படும் நோய் முற்றாக தடுக்கப்பட்டுதரமானவிதை உருளைக்கிழங்கைபயன் படுத்தினால் வழமைய விளைச்சலை விவசாயிகள் பெற முடியும்என்றார் (இ-11)

மக்கள் முகம்

## சித்தி விநாயகர் நிர்வாகிகள்

கிளிநொச்சி, பெப் 20

இரத்தினபுரம் சித்தி விநாயகர் ஆலய நிர்வாகிகள் வருமாறு:

தலைவராக ரி தணிகாசலம், உப தலைவராக வ. செ. இராசரத்தினம், செயலராக எஸ் விநாயகமூர்த்தி உபசெயலாளராக பி மகாலிங்கம், பொருளாளராக எஸ் கதிரவேலு ஆகியோரும் பதின்நான்கு நிர்வாகிகளும், கணக்காய்வாளராக எஸ். திருக்கேதீஸ்வரனும் தெரிவு செய்யப் பட்டனர் (இ-76)

# இளைஞர் கழகங்களின் துணிகரமான சேவை இன்றைய நிலையில் அவசியம்

இளவாலை, பெப். 20

விரக்தியும் பொருளாதாரக்கஷ்டமும் நிறைந்துள்ள இக்காலகட்டத்தில். ஆலயங்களில் இயங்கும் இளைஞர் கழகங்களின் துணிகரமான சமூகசேவையும், அபிவிருத்தி முயற்சியும் இன்று மிகமிக அவசியம்.

புனித யாகப்பர் ஆலய கத்தோலிக்க வாலிபரின் புனித பொஸ்கோ கழகம் கொண்டாடிய ஆண்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட அருள் திரு ரீ. பற்றிக் அடிகள் மேற்கண்டவாறு கூறினார்.

திருப்பலி பூசை முடிந்ததைத் தொடர்ந்து கழகத்தலைவர் செல்வன் தேவராஜா கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

கத்தோலிக்க பிரசிடியத் தலைவர் திரு எஸ் டேவிற் கழகத்தின் கடந்தவருடத்துப் பணிகளைப் பாராட்டிப் பேசினார்.

ஆசிரியர் வித்துவான் அ. சந்தியாப்பிள்ளையும் உரையாற்றினார் (இ-48)

# போராளிகள் மக்கள் உள்ளத்தில் ஆழமாக இடம் பெற்று விட்டனர்

## அஞ்சலிக் கூட்டத்தில் உரை

உடுப்பிட்டி, பப் 20

போராளிகள் வாழ்க்கையில் சுயபலனை எதிர்பாராமல் முழு மனித குலத்தின் விடிவிற்காக ஆயுதமேற்திப் போராடுகின்றனர். இதனால் அவர்கள் மக்களின் உள்ளங்களில் மிக ஆழமான இடத்தைப் பெற்றுவிட்டனர்.

கடந்த 14 ஆம் திகதி கைதடியில் எதிர்பாராமல் நிகழ்ந்த விபத்தில் பலியான புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பத்துப் போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தும்வகையில் வதிரி கடமன் விளையாட்டு மைதானத்தில் வதிரி மக்களால் கூட்டம் ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டது

கூட்டத்தில் எழுத்தாளர் திரு. சி. வன்னியகுலம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

ஆசிரியர் திரு. கே. லோகநாதன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

திரு. வன்னியகுலம் மேலும் பேசுகையில், எமது தமிழ் மக்களுக்காகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போராளிகளுக்கு ஆதரவாக சகல மக்களும் செயற்பட வேண்டும். போராட்டம் கூர்மையடைந்து சென்றுகொண்டிருக்கும் இவ்வேளையில் மக்கள் அனைவரும் போராட்டத்தில் பங்குகொள்ள வேண்டும்

போராளிகளைப் பொறுத்தமட்டில் அவர்கள் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்து வரும் இவ்வேளைகளில் நாம் சும்மா வீட்டில் இருந்து கொண்டு பத்திரிகைகளைப் படித்துவிட்டு அனுதாபப்படுவதில் எந்தவித பயனுமில்லை

இந்த வெடிவிபத்தில் பலியான போராளிகளின் உடல்கள்தான் எம் தமிழ் இனத்தை விட்டு தூரத்தில் சென்றிருக்கின்றன. அவர்களின் எண்ணங்கள், ஆசைகள் இன்றும் எங்களுடனேயே இருக்கின்றன,

இப்படி அவர் கூறினார்

ஆசிரியர் சிதம்பரப்பிள்ளை, ஆசிரியர் திரு விஜயரத்தினம், திரு சத்தியநாதன், திரு அம்பிகைபாலன் உட்பட பலர் உரை நிகழ்த்தினர். (இ-157)

# நிர்வாக விடயங்களை துரிதமாக நிறைவேற்றவே கல்விக் கோட்டங்கள் அமுல்

## பணிப்பாளர் கூறுகிறார்

பலாலி, பெப் 20

ஆசிரியர்களின் நிர்வாக விடயங்களைத் துரிதமாக நிறைவேற்றும் நோக்குடனேயே கோட்டமுறை கொண்டு வரப்பட்டுள்ளது.

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற அதிபர்கள் கூட்டத்தில் உரையாற்றிய யாழ் கல்விப் பணிப்பாளர் ஜனாப். எம்.எம் மன்சூர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

கல்விக்கோட்டம் ஒன்றில் 150 பாடசாலைகள் இருக்கவேண்டும்.

இக்கல்விக் கோட்ட முறையை யாழ். கல்வி மாவட்டத்தில் இவ்வருட இறுதியில் பூர்த்தியாக்கும் வேலையை மிகத் துரிதமாக நான் முடித்து வைக்கவுள்ளேன்.

கல்வி அமைச்சுத் திட்டப்படி 1988 ஆம் ஆண்டு இலங்கை முழுவதும் கொத்தணிப் பாடசாலை முறையே இயங்கும்.

அதற்கேற்றவாறு நாமும் கல்விக்கோட்ட முறையினைப் பூர்த்தியாக்கி கொத்தணி அமைப்பினையும் பூரணப்படுத்தவேண்டியுள்ளது'

இப்படி அவர் கூறினார். (இ-119)

## பேச்சியம்பாள் தேவஸ்தானம்

யாழ்ப்பாணம், பெப் 20

வண்ணை மேற்கு நாவலடி ஸ்ரீ பேச்சியம்பாள் தேவஸ்தானத்தின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர்: ந. நாகராசா உப தலைவர்: க குமரகுருபரன் செயலாளர்: து. தவநேசன், உப செயலாளர்: சோ. சற்குணம், பொருளாளர்: ந கணேஸ்வரன்.

செயற்குழு: து. புஷ்பராசா, ந தங்கராசா மு. சங்கரலிங்கம், இ. ஜெயசந்திரன், மு. பகிரதன்.

கணக்குப்பரிசோதகர்: க. கிருபாகரன்.

(இ-ஈ)

# பனை உரிமையாளரை ஸ்தாபனப்படுத்தும் முயற்சி

வல்வெட்டித்துறை, பெப். 20

வடமராட்சிப் பகுதியில் பனை உரிமையாளர்களை ஸ்தாபனப்படுத்தும் முயற்சி, வடமராட்சிப் பகுதி உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் மூலம் விசேட சேவை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த வகையில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் சனசமூக நிலையங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் கலந்துரையாடல்களும், கருத்தரங்குகளும் நடத்தப்பட்டு வருகின்றன. (இ-160)

# வட்டுக்கோட்டையில் மீண்டும் சட்டவிரோத மின்சார பாவனை

வட்டுக்கோட்டை, பெப். 20

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் வட்டுக்கோட்டை உப அலுவலகப் பிரதேசத்தில் தற்போது மீண்டும் சிலர் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது

எரிபொருள் தட்டுப்பாட்டைக் காரணமாகக் கூறி வசதிபடைத்தவர்கள் கூட இந்த நடவடிக்கையில் தற்போது ஆரம்பித்துள்ளனராம்.

இப்பிரதேசத்தில் சட்டவிரோத மின்சாரம் எடுப்போர் எண்ணிக்கை அதிகரிப்பதால் தற்போது அடிக்கடி மின்விநியோகம் தடைப்படுகின்றது.

இதனால் நிரந்தரமாக மின் விநியோகம் பெறுகின்றவர்கள் பாதிக்கப் பட்டுள்ளனர் (இ-161)

## கயரோக கருத்தரங்கு

பளை, பெப் 20

மாவிட்டபுரம்லயன்ஸ் கழகமும், இலங்கை தேசிய கயரோகத் தடுப்புச்சங்க வலிகாமம்வடக்கு கிளையும் இணைந்து நடத்தும் கயரோக கட்டுப்பாட்டுத்திட்டக் கருத்தரங்கு 21ஆம் திகதி சனிக்கிழமை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெறும்

இலங்கைத் தேசிய கயரோக நிவாரண சங்கத்தின் வடபிராந்தியத்தலைவர் வைத்திய கலாநிதி சி. இந்திரராஜா தலைமையில் கருத்தரங்கு நடைபெறும். (இ-119)

## எரிபொருள் ஏற்றிவந்தலொறி தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், பெப். 20

எரிபொருள் ஏற்றிவந்த தனியார் லொறி ஒன்று ஆனையிறவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் ஒருவருக்கு சொந்தமான இந்த லொறியில் வேறு பல பொருள்கள் ஏற்றப்பட்டு வந்ததாகவும் பொருள்களின் மத்தியில் எரிபொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது என்றும் கூறப்படுகிறது.

எனினும் லொறியை பூரணமாகச் சோதனையிட்ட சிப்பாய்கள் லொறிக்குள் இருந்த எரிபொருள் பரல்களைக் கண்டு லொறியை முகாமுக்குள் செலுத்திச் சென்றனர்.

சாரதியும் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் என்று தெரியவருகிறது (இ-10)

## விபத்தில் போராளி மரணம்

யாழ்ப்பாணம், பெப் 20

ஆய்வு ஒன்றின் போது ஏற்பட்ட விபத்தினால் விடுதலைப்புலிகள் இயக்க வீரர் ஒருவர் மரணமானார்.

அம்பாறை மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை இச்சம்பவம் நடைபெற்றது (சமன் ஜெயக்குமார் காரைதீவு)என்ற இளைஞரே மரணமானவராவார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர். (உ-10)


## பிரயாண ஒழுங்குகள்

சவூதி அரேபியா:- OPEN VISA

லிபியா:- எலெக்றிக் வெல்டிங், காஸ் வெல்டிங்

அனுபவம் உள்ளவர்களுக்கு மட்டும்.

சிங்கப்பூர்:- கப்பலில் வேலை செய்வதற்கு விரும்புவோருக்கான பயண ஒழுங்குகள்

விபரங்களுக்கு கீழ்க் காணும் முகவரியில் உடன் தொடர்பு கொள்ளவும்.

றை ஸ்ரார் றவல்ஸ்

இல. 6, நவீன சந்தை மேல்மாடி யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. 22881



## கோழிப் பண்ணையாளர்களுக்கு ஓர் நற்செய்தி!

அனேக பண்ணையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க உலகப் புகழ்பெற்ற

ஹைசெக்ஸ் (HISEX)

இன பிறவுண் பேட்டுக் குஞ்சுகளின் உற்பத்தியை மீண்டும் ஆரம்பித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

ஹைசெக்ஸ் (HISEX) இன பிறவுண் பேட்டுக் குஞ்சுகள்:

- மாறெக்ஸ் தடுப்பூசி ஏற்பட்டது.
- சொண்டு வெட்டப்பட்டது.
- குறைந்த இறப்பு விகிதமுடையது.
- குறைந்த உணவுடன் கூடிய விகிதத்தில் பிறவுண் நிற, கடினமான, ஒழுங்கான கோதுகளையுடைய முட்டைகளையிடக்கூடியது.

எமது பண்ணையில்:

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு நாள் குஞ்சு ஒன்றின் விலை: | 14-50 |
| மாறெக்ஸ் தடுப்பூசி: | .45 |
| பெட்டி: | .25 |
| ஒரு நாள் குஞ்சு ஒன்றின் மொத்த விலை: | 15.20 |

உற்பத்தியாளர்கள்:

பைரஹா பாம்ஸ் BAIRAHA FARMS

கட்டானை. KATANA.

உரிமையாளர்கள்:

M. I. M. நளீம் ஹாஜியார் அன் கம்பனி லிமிட்டெட்

வடபகுதியில் விநியோகிப்பவர்கள்:

என். சற்குணராஜா அன் பிறதர்ஸ்

ஸ்ரேசன் றோட், பிரம்படி, கொக்குவில்.


# செய்திக்கொத்து

## குடும்பநல சேவையாளர் பயிற்சி

கிளிநொச்சி. பெப். 20

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் குடும்பநல சேவையாளர்களாக கடமையாற்றுவதற்கென அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 14 பேரில் நால்வர் திருநகர், குடும்பநல சேவையாளர் பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டோர்களுக்கான மூன்றுமாத பயிற்சி கடந்த 2-ஆம் திகதி தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. (இ-76)

## வேதாகம போட்டிப் பரீட்சை

உடுப்பிட்டி, பெப். 20

யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் ஆண்டு தோறும் நடத்திவரும் வேதாகம போட்டிப்பரீட்சை இவ்வாண்டு மே மாதம் 30 ஆம் திகதி நடைபெறும்.

இவ்வாண்டு நடைபெறவுள்ள பரீட்சையில் பொது அறிவு வினாக்கள் பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு ஆயத்தம் செய் யும் பகுதியிலிருந்து வினாக்கள் ஆகிய நான்கு பிரிவுகளாக வினாக்கள் கொடுக்கப்படும் என்று யாழ் மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. சி. வின்சென்ற் தெரிவித்தார். (இ-157)

## கல்யாண மண்டபம்

சுழிபுரம், பெப். 20

புன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் [illegible] இல் 16 ஆம் திகதி [illegible] கல்யாண மண்டபம் அமைக்கப்படும்.

கோவில் தர்மகர்த்தாவும், பரிபாலன சபைத் தலைவருமான திரு. கயிலாயநாதனால் இதற்கான அடிக்கல் நடப்பட்டது. (இ-ரி)

## அதிபர் பதில் அதிபர் இடமாற்றம்

அச்சுவேலி, பெப் 20

அச்சுவேலி ஸ்ரீ விபசி வித்தியாசாலையில் அதிபராகக் கடமையாற்றிய திரு. எஸ் இராசத்துரை சிறுப்பிட்டி மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபராக இடமாற்றப்பட்டுள்ளார்

சிறுப்பிட்டி மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் பதில் அதிபராக கடமையாற்றிய திரு. எஸ் சிவப்பிரகாசம் அச்சுவேலி ஸ்ரீவிபசி வித்தியாலய பதில் அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (இ-11)

## உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கம் வீரவணக்கம்

யாழ்ப்பாணம், பெப். 20

அண்மையில் கைதடியில் ஏற்பட்ட விபத்தின் போது மண்ணின் மீட்புக்காக மரணித்த விடுதலைப் புலிகளுக்கு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் தனது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

தற்செயலாக ஏற்பட்ட இந்த விபத்தில் இறந்த பொதுமக்களின் குடும்பத்தவர்களுக்கும் தமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதாக இந்த இயக்கம் வெளியிட்டுள்ள [illegible] குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## சித்தி விநாயகர் ஆலயக் கூட்டம்

இரத்தினபுரம் சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. வ செ. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

திருவையாறு, இரத்தினபுரம் மக்கள் பலர் சமூகமளித்த இக்கூட்டத்தில் கட்டடத் திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ். திருக்கேதீஸ்வரன், இரத்தினபுரம் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் ஏ பரமசாமி, முன்னைநாள் தலைவர் வி. ராமசாமி உட்பட பலர் உரையாற்றினர், (இ-76)

## இடமாற்றம்

ஊர்காவற்றுறை, பெப். 20

ஊர்காவற்றுறை கன்னமடு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திலிருந்து இரு ஆசிரியைகள் இடமாற்றம் பெற்றுள்ளார்கள்.

விசேட பயிற்சிபெற்ற ஆசிரியையான திரு. ஹரியற் ஸ்டீபன் கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் ஆரம்ப வித்தியாலயத்திற்கும், விசேட பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியையான திருமதி மேரிராணி இச்சொக்வேலனை மத்திய மகா வித்தியாலயத்திற்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர். (இ-16)

## கிராம நீதிமன்றம் இடம் மாறும்

வல்வெட்டித்துறை பெப். 20

மேலைப்புலோலி பெண்கள் பாடசாலையில் இயங்கிவந்த அல்வாய் வடக்கு கிராமிய நீதிமன்றம் 23ஆம் திகதி தொடக்கம் தனியார் வீடு ஒன்றில் இயங்க உள்ளது. (இ-160)

## 4ஆவது ஆண்டு நினைவஞ்சலி



செல்வி பிரபாலினி பாலசுப்பிரமணியம்

(வேம்படி மகளிர் உயர்தர விஞ்ஞான மாணவி)

ஜெனனம்: 15 - 10 - 1963

சிவபதம்: 20 - 02 - 1983

அன்பின் பிரபா, நீர் எம்மை விட்டகன்று இன்றுடன் நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. கொடியவன் லொறியால் இமைப்பொழுதில் உமது உயிரைப் போக்கடித்தான். அவனை இறைவன் நிச்சயம் தண்டிப்பார்.

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

Prabha, four years ago on this day, you passed away suddenly without a word by the fatal accident-leaving memories whose worth can never be told. Your presenee we miss, your memories we treasure forgetting you never. Too good a rear diamond we had to loose. It was Gods wish we could not choose. God has thought it best to take you to his peaceful and beautiful palace. Yet, some day we hope and pray, we shall be together with you to stay.

பெற்றோர், சகோதரர், உறவினர், நண்பர்கள்.

கல்லூரி வீதி, காங்கேசன்துறை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

படிக்குந்தோறும் எமது அறியாமையை அறிகிறோம். அறிவு என்பது ஆர்வத்தின் கண்ணுயிருந்து ஆன்மாவின் தேரோட்டியாய் மலரும். —ஷெல்லி


# உதயன்

இல, 15, 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 20-02-1987 த.பெ.இல. 88


## அகதிகளாய்ப் போய் அவமானம் அடைவான் ஏன்?

அகதிகளாக ஏற்குமாறு தஞ்சம் கோரிச் செல்லும் ஈழத் தமிழர்களை மேற்கு நாடுகள் நாடு கடத்தும், இலங்கைக்கே திருப்பி அனுப்பும் சம்பவங்கள் இப்போது அதிகரித்து வருகின்றன.

ஆகப் பிந்திய சம்பவம் பிரிட்டனில் நடைபெற்றிருக்கிறது. 58 ஈழத் தமிழரை நாடு கடத்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருந்த போதிலும் நீதிமன்றம் அதற்கு இடைக்காலத் தடை விதித்திருக்கிறது.

சம்பந்தப்பட்ட 58 பேரையும் திருப்பி அனுப்புவதற்குத் தாம் எடுத்த முடிவு சரி என்றும், தக்க காரணங்களை வைத்தே தாம் அந்த முடிவுக்கு வந்ததாகவும் அரச அமைச்சர் வாதாடுகிறார்.

ஆனால் 58 பேரையும் திருப்பி அனுப்பும் முடிவில் அசாதாரண முறை பின்பற்றப்பட்டதாக அகதிகள் சம்பந்தமாக ஆலோசனை கூறும் அமைப்பின் பிரதிநிதி குற்றம் சாட்டி இருக்கிறார்.

பெண்கள், குழந்தைகள் உட்பட்ட 58 பேரையும் பிரிட்டன் அகதிகளாக ஏற்றுக் கொள்ளுமா இல்லையா என்பது நீதிமன்றத்தின் தீர்ப்பிலேயே தங்கி இருக்கிறது.

சுவிட்சர்லாந்தில் ஏற்கனவே அகதிகளாகத் தஞ்சம் கோரித் தங்கியிருப்போரின் மனைவியர் பிள்ளைகள் என்று 15 பேர் ஜெனீவா விமான நிலையத்தில் நிலத்துக்கு அடியில் தடுத்து வைக்கப்பட்ட சம்பவமும் கடந்த வாரத்தில் நடந்திருக்கிறது.

ருமேனியா சென்ற 20 ஈழத் தமிழர் விமான நிலையத்தில் உணவு வசதியும் இன்றி குளிர் அறைக்குள் விறைக்க விடப்பட்டிருந்த சம்பவமும் அண்மையில் நடைபெற்றது.

மேற்கு ஜேர்மனியும், பின்னர் பிரான்ஸும் ஈழத் தமிழர்களை அகதிகளாக ஏற்றுக் கொள்வதையும், தஞ்சம் அளிப்பதையும் கட்டுப்படுத்தி இருந்தன. கதவையே மூடியதாகவும் சொல்லலாம்.

மொத்தத்தில் ஈழத் தமிழர்களை அகதிகளாக ஏற்பதற்கு முற்றாக மறுக்கும் ஒரு சூழ்நிலை இப்போது மேலை நாடுகளில் உருவாகி இருக்கிறது.

இதற்கான காரணங்களை ஆராயப் புகின் பல வெளிப்படும்.

* அளவுக்கு அதிகமானவர்கள் ஒரே நாட்டுக்குச் செல்லும்போது எல்லோரையும் அகதிகளாக ஏற்று வசதி செய்யமுடியாத நிலை அந்த நாட்டுக்கு ஏற்படுதல்.
* அகதிகளாகச் செல்லும் எம்மவரில் ஒரு சிலர் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் ஈழத் தமிழர் எல்லோருமே அப்படியானவர்கள் என்ற தப்பெண்ணம் பரவியமை.
* இதனைச் சாதகமாக வைத்து இலங்கை அரசாங்கம் ஈழத் தமிழரைப் பற்றிக் கேவலமான முறையில் பிரசாரம் செய்து வருதல். அதன் விளைவு.
* தமிழ்ப் பகுதிகளில் நடக்கும் அட்டூழியங்களை மறைத்து தமிழர்கள் பிரச்சினை இல்லாமல் வாழ்கிறார்கள் என்று இலங்கை அரசு மேலைநாடுகளில் செய்து வரும் பொய்ப் பிரசாரம்
— அப்பாவி மக்களைக் கொன்றுவிட்டு அரச படைகள் போராளிகளுடன் மோதி அவர்களைக் கொன்றதாக அரசு காட்டும் பொய்க் கணக்கை ஓர் உதாரணமாகச் சொல்லலாம்.
* அரசின் கேவலமானதும் பொய்யானதுமான பிரசாரத்தால் ஈழத் தமிழர்கள் அகதிகள் அந்தஸ்துக்குத் தகுதி உடையவர்களா என மேலைநாடுகள் சந்தேகக் கண்ணோடு பார்ப்பது.

இத்தகைய சூழ்நிலையில் இரண்டு வினாக்கள் எழுகின்றன. இலங்கை அரசின் பொய்ப் பிரசாரங்களை முறியடிக்க என்ன செய்யலாம் என்பது ஒன்று.

இந்தளவு அவமானங்கள் அவதிகள் கஷ்டங்களோடு வெளிநாடு செல்லத்தான் வேண்டுமா என்பது இரண்டாவது.

எல்லோரும் அகதிகளாக வெளிநாடு சென்று விட்டால் உரிமைகளையும் சுதந்திரத்தையும் வென்றெடுப்பது யார்? யாரோ ஆக்கி வைக்கும் சோற்றை ஆற அமர வந்து உண்ணும் நோக்குடன் எல்லோரும் வெளிநாடு போய் விட்டால்...?

விரட்டியடிக்கப்பட்ட பலஸ்தீனியர் தமது மண்ணில் இல்லாததால் கடந்த சுமார் 40 வருடங்களாக அதனை மீட்கப் பெரும்பாடு படுகின்றனர். அந்தநிலை எமக்கும் வர வேண்டுமா?

மண் பற்றும், இனப் பற்றும் இருந்தால் வெளிநாடு சென்று நிம்மதியாக வாழ வேண்டும் என்ற எண்ணம் எவருக்கும் எழாது. இது நாம் பிறந்த பூமி சாவதானாலும் இங்கேயே செத்துமடிய வேண்டும் என்ற தேசப்பற்று இருப்பின் வெளிநாடு சென்று அவமானம் அடையத் தேவையில்லை.

மயிர் நீப்பின் உயிர் வாழாத கவரிமானை விடவா தமிழன் மானம் கெட்டவன்?

இதற்குப் பிறகும், வெளிநாட்டுக்கு ஓடுவோர் கோழைகள்; மானம் இழந்தவர்கள்; மண் பற்று இல்லாத தேசத் துரோகிகள் என்று கணக்கிடப்பட வேண்டியது தான்!

வெளிநாடு போக வாய்ப்பும் வசதியும் இல்லாத எம்மவரில் பலர் சொந்த மண்ணிலேயே அகதிகளாய் இருந்து கஷ்டப்படுகிறார்களே! அவர்கள் மனிதர்கள் இல்லையா? உண்மையான தமிழர்கள் அவர்களே!

## வியட்நாமில் 13 பேர் மந்திரி பதவி நீக்கம்

ஹானோய், பெப் 19

வியட்நாமில் 13 அமைச்சர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

ஏனைய அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட பதவிப் பொறுப்புகளிலும் அடிப்படை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார மாற்றங்களைத் துரிதமாக அமுல் செய்யும் நோக்குடன் வியட்நாமிய கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய தலைவர்கள் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்கள்.

வட வியட்நாமும் தென் வியட்நாமும் 1975ஆம் ஆண்டு ஒன்றாக இணைத்துக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து அந்நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து வந்துள்ளது.

இதனைத் தடுத்து நிறுத்தி வியட்நாமை பொருளாதார வலிமையுள்ள நாடாக மாற்றுவதற்கு புதிய தலைவர்கள் உறுதிபூண்டுள்ளார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய தலைவராக கடந்த டிசம்பர் மாதம் பதவி ஏற்ற லீவான்லின் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளில் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றார்.

அமைச்சரவை மறுசீரமைக்கப்பட்ட போதிலும் பிரதமர் தாம் வான் சொங் தொடர்ந்தும் அதே பதவியை வகிக்கின்றார்.

பாதுகாப்பு அமைச்சர், உள்துறை அமைச்சர் உட்பட 13 பேர் விலக்கப்பட்டுள்ளார்கள்.

அமைச்சரவை எண்ணிக்கை 23 இலிருந்து 19 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

9 அமைச்சுக்களின் பொறுப்புகள் முற்றிலும் புதியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஒ)

### இணைப்புத் தவிர்ந்த

## வேறு திட்டங்களை பரிசீலனை செய்ய ஜனாதிபதி தயாராம்

வாஷிங்டன், பெப் 19

வடக்கு கிழக்கு இணைப்புத் தவிர்ந்த வேறு ஏதாவது திட்டங்களைப் பரிசீலனை செய்வதற்கு எமது ஜனாதிபதி தயாராக உள்ளார்.

இவ்வாறு வெளிநாட்டு அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. சூல்ட்ஸிடம் தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விதத்தில் பல தடைகள் நீங்கி விட்டன. அவற்றை மேலும் முன்னேற்றுவதற்கான எந்த ஆலோசனையையும் பரிசிலனை செய்ய எமது ஜனாதிபதி தயாராக உள்ளார்.

ஆனால் வடக்கு - கிழக்கு இணைப்புக்கு நாம் சம்மதிக்க மாட்டோம். புதிய யோசனைகள் கிழக்கு மாகாணத்தில் உள்ள சிங்கள, முஸ்லிம் மக்களுக்குப் பாதகமானதாக இருக்கக்கூடாது என்பதும் முக்கியமாகும்.

இவ்வாறு ஜனாப் ஹமீத் தெரிவித்தார்.

இலங்கை இனப் பிரச்சினைக்கு விரைவில் அரசியல் தீர்வு ஏற்படும் என அமெரிக்கா நம்புவதாகத் திரு சூல்ட்ஸ் தெரிவித்தார். (அ)

# நிக்கராகுவாவின் கிளர்ச்சியாளருக்கான உதவியை நிறுத்துக

## றேகனுக்கு கோரிக்கை

வாஷிங்டன், பெப்.19

நிக்கராகுவாகிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் வழங்கி வரும் ஆதரவு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு அமெரிக்க செனட்சபை உயர்குழு ஜனாதிபதி றேகனைக் கோரியுள்ளது.

அமெரிக்கா 40 கோடி டாலர் உதவியையும் பெருந்தொகையான போர் ஆயுதங்களையும் கிளர்ச்சியாளர்களுக்கு விற்பதன் மூலம் மறைமுகமாக நிக்கராகுவாவின் சுதந்திரத்திலும் தனது இறைமையிலும் தலையீடு செய்கின்றது.

அமெரிக்கா தரும் பலத்த உதவியால் கிளர்ச்சியாளர்கள் பாரிய சேதங்களை நிக்கராகுவா அரசிற்கும் மக்களுக்கும் ஏற்படுத்துகின்றார்கள்.

இது உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

இவ்வாறு செனட்சபை உயர் அதிகாரிகள் குழு தெரிவித்துள்ளது.

இதனை அமெரிக்க காங்கிரஸும் செனட்சபையும் வரவேற்றுள்ளன (ஒ)

## அமெரிக்காவும் தென்கொரியாவும் போர் ஒத்திகை

சியோல், பெப் 19

அமெரிக்காவும் தென்கொரியாவும் பெரிய போர் ஒத்திகை ஒன்றை இன்று ஆரம்பிக்கவுள்ளன.

வடகொரியா கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளபோதிலும் இந்தப் போர் ஒத்திகை சுமார் 10 வாரகாலம் நீடிக்கும் என்று தென்கொரியா அறிவித்துள்ளது.

அமெரிக்காவையும் தென்கொரியாவையும் சேர்ந்த சுமார் இரண்டு லட்சம் துருப்புக்கள் இந்த ஒத்திகையில் கலந்துகொள்ளவிருக்கின்றன.

பசுபிக் பிராந்தியத்தில் நிலைகொண்டுள்ள அமெரிக்க விமானம் தாங்கிக்கப்பல் உட்பட பெருந்தொகையான கப்பல்களும் இந்த ஒத்திகைக்குப் பயன்படுத்தப்படும். (ஒ)

**வெளி உலகில்**

### பிலிப்பீன்ஸில்

## 39 பொலிஸ் மீது சட்ட நடவடிக்கை

மணிலா, பெப்.19

பிலிப்பீன்ஸில் கடந்த மாதம் தோல்வியுற்ற சதிமுயற்சியுடன் தீவிர தொடர்பு கொண்டிருந்த 39 பொலிஸ்காரர்கள் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்குதல் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளையில் ஆயுதப்படையினரின் பிரதம தளபதி பிடேல் ராமேஷிற்கு ஜனாதிபதி அக்கினோ தனது பூரண ஆதரவை வழங்கியுள்ளார்.

ராணுவ உயர் பதவிகளில் மாற்றம் செய்யப்படவுள்ளதென்றும் ஜெனரல் ராமேஷ் விலக்கப்படலாம் என்றும் வெளிவந்த வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் ஜனாதிபதி அக்கினோ இன்று அறிக்கையொன்றை விடுத்தார். (ஒ)

## எல்லைத் துருப்புகள் வாபஸ்

இஸ்லாமாபாத், பெப் 19

பாகிஸ்தானும் இந்தியாவும் தத்தமது துருப்புகளை இரு நாடுகளுக்கும் பொதுவான எல்லையில் இருந்து இன்று வாபஸ் பெற்றுக்கொள்ள ஆரம்பித்துள்ளன

சுமார் மூன்று வார காலத்திற்குள் சகல படைகளும் திரும்பிவிடும் என பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது (ஒ)

## லெபனான் பிரதமர் ராஜினாமா

பெய்ரூட், பெப். 19

லெபனானின் பிரதம மந்திரி ராஸித் கராமே ராஜினாமாச் செய்துள்ளார்.

லெபனானில் தொடர்வது நடைபெற்றுவரும் போரைத் தனது கட்டுப்பாட்டினுள் கொண்டுவர முடியாமல் போய் விட்டதே ராஜினாமாவிற்குரிய முக்கிய காரணமெனத் தமது கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

லெபனானில் 1975ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் ஆரம்பித்ததைத் தொடர்ந்து கடும் சண்டைகள் முதல்தடவையாகக் கடந்த வாரம் முதல் நடைபெற்று வருகின்றது. (ஒ)

## பத்துக் கோடி கடன்

கன்பெரா, பெப் 19

அவுஸ்திரேலியாவின் வெளிநாட்டுக் கடன் 10 ஆயிரம் கோடி டாலருக்கும் அதிகமாக அதிகரித்துள்ளது

நாணய பெறுமதி வீழ்ச்சி அடைந்துள்ளதால் இக்கடன்தொகை அதிகரித்துள்ளதாக அவுஸ்திரேலிய நிதி அமைச்சு தெரிவித்தது (ஒ)

## ஜெனீவாவில் ஆப்கான் பிரச்சினை

ஆப்கானிஸ்தான் பிரச்சினை குறித்து ஐக்கியநாடுகள்சபை ஸ்தாபனத்தின் ஆதரவில் மற்றுமொரு சுற்றுப்பேச்சு வார்த்தைகள் இம்மாதம் 25ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாகும்.

மூன்று வாரங்களுக்கு இப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# மனம் உருக்கும் மணிவாசகம்

'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பது ஒரு பழமொழி. இந்தப் பழமொழி சைவத் திருமுறையாகிய அதைப் போற்றிப் பாடும் சைவர்

**ஞானக்கதிர்**

களிடையே பரவுவது என்று நினைக்கலாம்.

ஆனால் திருவாசகம் அயல் மதத்தினரையும் மயக்கியது. உருக்கியது என்றால், அந்தப் பழமொழி எல்லாருக்கும் பொதுவானது என்றுதானே சொல்லவேண்டும். திருவாசகத்தை ஆங்கிலத்தில் ஜி யூ போப் மொழிபெயர்த்தார்.

திருக்குறள், நாலடியார் என்ற இரண்டையும் மொழிபெயர்த்திருக்கிறார் அவர்.

அவை நீதி நூல்கள். திருவாசகமோ சைவ சமயநூல். அதையும் மொழி பெயர்த்தார். அதில் ஈடுபட்டு மொழிபெயர்த்ததற்குக் காரணம் அந்த நூல் அவர் உள்ளத்தை உருக்கியிருக்க வேண்டும்.

சிவன் என்றும், பரமபிதா என்றும் கடவுளை வேறு வேறு பெயரால் சொல்லலாம். அவரைப் பற்றிய இலக்கணங்கள் அந்த அந்தச் சமயத்துக்கு ஏற்றவகையில் அமைந்திருக்கும். என்றாலும் இறையுணர்வு, பக்தி, ஆன்மாவின் ஏக்கம் என்பவை எல்லாச் சமயத்துக்கும் பொதுவானவை.

திருவாசகத்தில் இறைவன் திருவருட்சிறப்பையும் நம்முடைய அவல நிலையையும் எண்ணி உருகுவதற்குரிய இடங்கள் பல உண்டு 'இவை சிவபெருமான் என்னும் சைவர்களின் கடவுளைப் பற்றியவை' என்பதை மறந்து ஈடுபட்டால் மனித மனம் நிச்சயமாக உருகும். போப் அப்படி உருகியவர்.

நம் நாட்டில் திருவாசகத்துக்குரிய மதிப்பு மிகப் பெரியது. அதை 'என்புருக்கி நூல்' என்பார்கள். 'திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின், கருங்கல் மனமும் கரைந்துருகக் கண்கள் தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய, அன்பர் ஆகுநர் அன்றி, மன்பதை உலகில் மற்றையோர் இலரே!'' என்று சிவப்பிரகாச சுவாமிகள் பாடுகிறார்.

சைவத் திருமுறைகள்



பன்னிரண்டில் எட்டாவது மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகமும் திருக்கோவையாரும். மாணிக்க வாசகர் காதலனிடம் காதலி கொள்ளும் முறுகிய அன்பு போன்ற பக்தியில் சிறந்தவர். ஆதலின் அவரைச் சன்மார்க்க நெறியில் நின்றவர் என்பார்கள்.

மனித மனத்தை உருக்குவதற்குரியவை இரண்டு. நம்முடைய அவலத்தை நினைந்தால் மனம் உருகும். இறைவனுடைய அருளை நினைந்தாலும் மனம் உருகும். இந்த இருவகை இயல்புகளும் திருவாசகத்தில் இருக்கின்றன. [illegible] தேனை சார்ந்து சார்ந்து என் என்புருக்கி, கரும்புதரு சுவை எனக்குக் காட்டினை, உன் பொன்னடிகள்'' "நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கும், தாயிற் சிறந்த தயாவான தத்துவனே'' என்பவை போலப் பாடும் இடங்கள் பல.

மணிவாசகப் பெருமான் திருப்பெருந்துறையில் இறைவனே குருநாதனாக எழுந்தருளி வந்து ஆட்கொள்ளப் பெற்றவர். திருவாதவூரிலே பிறந்து, மதுரையில் பாண்டிய மன்னனுக்கு அமைச்சராக விளங்கி, திருப்பெருந் [illegible]

### விடுதலைப் புலிகளிடம்

# தெளிவில்லாத யோசனைகளை திணிப்பது சாதுரியமற்ற செயல்

## 'இந்து' தலையங்கம்

> "இலங்கையில் பேச்சவார்த்தைக்கு புத்துயிர் அளிக்கும் முயற்சி'' — என்ற தலைப்பில் 'இந்து' ஆங்கில நாளிதழில் (9-2-1987) பிரசுரமான பிரதான ஆசிரியர் தலையங்கத்தின் இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

அண்ணா தி.மு.க. அரசின் செல்வாக்கைப் பயன்படுத்தி போராளிகளை நிர்ப்பந்திக்க இந்திய அரசெடுத்த முயற்சி வெற்றி அளிக்கவில்லை.

கடந்த நவம்பரில் உருவான கிழக்கு மாகாணத்தை தமிழ், சிங்களம், முஸ்லிம் என்று மூன்றாகப் பிரிக்கும் விவேகமற்ற யோசனையை, திரு. பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகளை ஏற்றுக் கொள்ள வைக்கும் முயற்சியிலும் இந்தியா வெற்றி அடையவில்லை.

கிழக்கு மாகாணத்தில் இருந்து அம்பாறையின் சிங்களப் பகுதிகளைப் பிரித்து அருகில் உள்ள சிங்கள மாகாணத்துடன் இணைப்பதும் அதன்மூலம் புதிதாக அமைக்கப்படும் கிழக்கு மாகாணத்தில் தமிழரின் எண்ணிக்கையை அதிகரிப்பதுடன் அவர்களுக்கு அரசியல் அதிகாரத்தைக் கூட்டுவதும்தான் டிசம்பர் 19இல் உருவான யோசனைகளின் முக்கிய அம்சம்.

இது முந்தைய சிந்தனையிலும் பார்க்க முன்னேற்றகரமானது என்பது தெளிவாகத் தெரிகிறது

இந்த யோசனை திடமானதாக இல்லை.

போராளிகளுக்கோ, மிதவாதிகளான தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கோ சமர்ப்பிக்கக் கூடியதான யோசனைகளாக டிசம்பர் 19 யோசனைகளை இந்திய மத்தியஸ்தர்கள் கருதவில்லை என்பதுதான் புதுமையாக உள்ளது.

தீவிர சங்கற்பத்துடனான தனிமைத்துவத்தைக் கொண்டது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்

அப்பாக்கி முனையில் தெளிவில்லாத யோசனைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கொள்கையைத் தொடருவது, அரசியல் சாதுரியமற்ற செய்கையும்.

பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் இந்தியாவின் முயற்சி நம்பிக்கை தராத இருள் சூழ்ந்த ஒன்று என்பது இதன் அர்த்தம் அல்ல.

இனப்பிரச்சினை மோதலின் தாக்கம், சுமை இலங்கையை நன்றாகப் பாதித்துள்ளது

இலங்கை அரசின் கொள்கை வகுப்பாளர் மத்தியில் நிலவும் பிளவு இன்னும் வெளிப்படையாகத் தெரியவில்லை. இருந்தும் இது குறித்து அரசியல் அவதானிகள் அக்கறை காட்டுகின்றனர்.

திரு. அத்துலத்முதலி தலைமையிலான குழு ஒன்று தீவிர இராணுவ தீர்வு ஒன்றையே விரும்புகின்றது மற்றவர்கள் இது சரிவராது என்று நம்புகின்றனர்.

சிங்கள அரசியலில் சமாதான முயற்சியில் உண்மையில் அக்கறை கொண்டவர்கள் இருப்பதாக அறிந்தால் அவர்களைச் சரியாகப் பயன்படுத்தும் கொள்கையை இந்தியா கடைப்பிடிக்க வேண்டும்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் கடந்த நவம்பரில் காட்டிய வரவேற்கக்கூடிய சைகைகளை மாநில, மத்திய அரசுகள் எடுத்த விகாரமான நடவடிக்கைகள் மழுங்கடித்துவிட்டன.

ஈழம் தவிர்ந்த நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றைக்காணும் இந்திய அரசின் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்க தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருந்தது.

ஆனால் நம்பக்கூடிய சூழ்நிலை ஒன்று உருவாக்கப்படுமானால் இந்திய மத்தியஸ்தத்திலான பேச்சவார்த்தைகளில் கலந்து கொள்ளவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருந்தது.

எம். ஜி. ஆருக்கு பிரபா கடிதம்

கடந்த ஆண்டு நவம்பர் 3ஆம் திகதி தமிழ் நாடு முதலமைச்சருக்கு திரு பிரபாகரன் அனுப்

(4ஆம் பக்கம் பார்க்க)



**பொய்யாமொழி**

குறள்:
செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.

பொருள்:
குறை கூறுவோரின் சொற்களைச் செவி கைக்கும் நிலையிலும் பொறுக்கின்ற பண்பு உடைய அரசனது குடை நிழலில் உலகும் தங்கும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சிறந்த முறையில் வீடியோ படம் எடுப்பதற்கு
வீடியோ விஹொன்ஸ்
ஒளிப்பதிவாளர்
சி. இராஜராஜனின்
கலை நுணுக்க ஒளிப்பதிவில்
உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்துகொள்ளுங்கள்
இல- 353 C, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

20 - 02 - 1987 வெள்ளிக்கிழமை

(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)
For quality Video Filming
VIDEO VIHONS
RAJARAJHANS'
Effects and Techniques in videography gives great pleasure for all your memorable events at home or else.
No. 353 C, Clock Tower Road,
JAFFNA.
(Near Wellington Junction)

★ எரிபொருள் தடை:

## பாதிப்புகள் குறித்து தூதரகங்களுக்கு கடிதம்

### பரு. வர்த்தகர் சங்கம் அனுப்பியது

பருத்தித்துறை, பெப். 20

எரிபொருள் தடையினால் வடபகுதிப் பொதுமக்களுக்கு குறிப்பாக பருத்தித்துறைப் பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் பாதிப்புகள் குறித்து பருத்தித்துறை வர்த்தகர் சங்கம் வெளிநாடுகளின் கவனத்துக்குக் கொண்டுவந்திருக்கிறது.

இது தொடர்பாக சங்கம் சகல வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் அவசர தந்திகளையும் கருத்துக் கடிதங்களையும் அனுப்பியுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசினால் திட்டமிட்டுக் கொண்டுவரப்பட்ட எரிபொருள் தடையைத் தொடர்ந்து பருத்தித்துறை மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாளாந்தம் விளக்கு எரிப்பதற்கும், விவசாயத்திற்கும் மீன் பிடிப்பதற்கும் தேவையான அத்தியாவசிய எரிபொருட்களான பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் இல்லாததால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் ஏழை விவசாயிகளும் மீனவர்களுமே.

இதேபோல் சுகாதார சேவைகள், அத்தியாவசிய போக்குவரத்துக்கள், மாமூல் வாழ்க்கைத் தேவைகளும் ஸ்தம்பிதம் அடைந்ததால் வடக்கு மாகாண மக்கள் பெருந் துயரில் அவதியுறுகின்றார்கள்.

இப்படி தந்திகளிலும், கடிதங்களிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-118)

## தெளிவில்லாத...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பிய கடிதத்தில் இருந்து இது தெளிவாகிறது.

அக்கடிதத்தில் திரு. பிரபாகரன் ஈழம் கோரிக்கையை வலியுறுத்தவில்லை.

வடக்கு, கிழக்கிப் பிரிபடாத தாயகம் என்ற கோட்பாட்டை அங்கீகரிக்கும் வகையிற் கருத்துள்ள அரசியல் தீர்வு ஒன்றையே திரு. பிரபாகரன் வலியுறுத்தி இருந்தார்.

"யாழ் குடாநாட்டின் மீதான பொருளாதார முற்றுகை நீக்கப்பட வேண்டும்; இராணுவத் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும், அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும்" பேச்சுக்களுக்கு முன்னோடியாக, மேற்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதன் மூலம் பொருத்தமான சூழ்நிலை ஒன்றைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதே போராளிகளின் நிலைப்பாடு. இதுதான் தற்போதைய நிலை.

இவைகடுமையானமூன் நிபந்தனைகளாக விதிக்கப்படவில்லை. ஆனால் இந்த நடவடிக்கைகள் இந்திய மத்தியஸ்தத்தின் உதவியுடன் இலங்கையுடன் பேச்சுக்கள் நடத்த வழிகோலும் என்று தெரிவிக்கப்பட்டது.

தீவிர பேச்சுக்களுக்கான அரசியல் அடிப்படை ஒன்றைக் காணுவது கஷ்டமாக இருப்பினும் இருபக்கத்தினரையும் கட்டுப்படுத்தக் கூடிய யோசனைகள் எதுவும் இல்லாமல் திறந்த மனத்துடனான பேச்சுக்கள் நடத்தவும் தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராக உள்ளனர்.

### 3 நிபந்தனைகள்

மூன்று நிபந்தனைகளை இந்திய அரசு இலங்கையிடம் வலியுறுத்துகின்றது. அதே நேரத்தில் இலங்கைத் தமிழர்களின் நம்பிக்கைக்குரிய பிரதிநிதிகளுடன் அரசியல் செல்வாக்கையும் புதுடில்லி வளர்த்துக்கொள்ளவேண்டும்.

இந்திய அரசு இலங்கைக்கு விதித்துள்ள மூன்று நிபந்தனைகள் வருமாறு:

1. டிசம்பர் 19 யோசனைகளில் உறுதியாக நிற்பதாக ஜனாதிபதி ஜெயவர்த்தன பகிரங்கமாக அறிவிக்கவேண்டும்.

2. யாழ் குடாநாடு மீதான பொருளாதார முற்றுகை நீக்கப்பட வேண்டும்.

3. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகள் இடைநிறுத்தம் செய்யப்படவேண்டும்.

இரண்டு விரோதிகளுக்குஇடையேயான, இன்னும் கவனத்தை ஈர்த்துள்ள, அரசியல் இடைவெளியைக் குறைக்கும் முயற்சியில் அவர்களை மீண்டும் பேச்சு வார்த்தைப் பாதைக்கு அழைத்துச் செல்லவேண்டும்.

சவால் விடுக்கும் இப்பணியில் ஈடுபடுவதற்காகத் தன்னை மிகவும் கவனமாக இந்தியா தயார் செய்துகொள்ள வேண்டும்.

துக்ககரமான இனப்பிரச்சினை மோதலில் இராணுவ ரீதியில் வெற்றிகாண முடியாது என்பதை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை சிங்களவர் தமிழர் மத்தியில் அதிகரித்து வருகிறது.

அமைதித் தீர்வு காணும் முயற்சியில் இதனைச் சாதகமாகப் பயன்படுத்த முடியும்.

(முற்றும்)

இழுபறி நிலையின் பின்

## தமிழ்நாடு, இலங்கை மீனவர் விடுவிப்பு!

சென்னை, பெப் 20

தமிழ்நாடு மீனவர்கள் ஐந்து பேர் கடந்த 11ஆம் திகதி கொழும்பு இந்தியத்தூதரக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்ட மறுநாள் தமிழ் நாட்டில் காவலில் வைக்கப்பட்டிருந்த 4 சிங்கள மீனவர்கள் சென்னையில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

### சிங்கள மீனவர்

மாத்தறை மாவட்டத்தைச்சேர்ந்த நான்குசிங்கள மீனவர்கள் திசை மாறி தமிழ் நாடு சிதம்பரனார் மாவட்டத்தைச் சேர்ந்த பெரிய தாழை கடற்கரையில் சென்ற மாதம் 10 ஆம் திகதி ஒதுங்கினர்.

வெளிநாட்டார் சட்டத்தின்கீழ் இந்த நால்வரும் திருச்செந்தூர் சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

### தமிழ் நாடு மீனவர்

தஞ்சாவூர் மாவட்டத்தில் கோடிக்கரையைச் சேர்ந்த 5 தமிழ் மீனவர்கள் வந்த படகு இலங்கைக் கடற்படைப் படகுடன் மோதிய சம்பவம் சென்ற மாதம் 27 ஆம் திகதி நடைபெற்றது.

இந்த அசம்பாவிதத்தில் ஒரு மீனவர் காயமடைந்தார்.

இலங்கைக் கடற்படையினர் இவர்களைக் கொழும்புக்கு கொண்டு சென்று காவலில் வைத்தனர்.

சிங்கள மீனவரை விடுவித்தால் தமிழ் நாடு மீனவரை விடுவிப்போம் என்று இலங்கை அரசு பிரச்சினை எழுப்பியது. இதைத் தொடர்ந்து மீனவர்களின் விடுதலை தாமதம் அடைந்தது.

கடைசியாக தமிழ் நாடு மீனவரை 11 ஆம் திகதி இலங்கை விடுவித்தது.

தொடர்ந்து தமிழக அரசின் உத்தரவின் மீது சிங்கள மீனவர் விடுவிக்கப்பட்டனர். (உ-எ)

## சீட்டிழுப்பு 28 ஆம் திகதி

யாழ்ப்பாணம், பெப் 20

தமிழ் ஈழ இராணுவம் நடத்தி வந்த கவிப் டிக்கெட் சீட்டிழுப்பு முன்னர் அறிவித்தபடி இன்று நடைபெற மாட்டாது. 28 ஆம்திகதி சீட்டிழுப்பு நடைபெறும் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (உ)

## நிதி கோரும் விண்ணப்பம்

அகதிகள் புனர்வாழ்வு நிதியம் – 1983 இன் முகாமைத்துவச் சபை திருகோணமலை மாவட்டத்திலிருந்தும், மற்றைய பகுதிகளிலிருந்தும் யாழ்ப்பாணத்திற்குப் பெருந் தொகையினராக வரும் அகதிகட்கு, நிவாரணம் அளிக்குமுகமாக வர்த்தக ஸ்தாபனங்கள், நிறுவனங்கள், பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து பணமாகவோ, பொருளாகவோ உதவி வேண்டி நிற்கிறது.

அகதிகள் புனர்வாழ்வு நிதியம்-1983
முகாமைத்துவச் சபை
வை. எம். சி. ஏ கட்டிடம்,
யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 20 - 02 - 1987 தொலைபேசி இல. 24805 22078

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA

Registered as a News - paper at the General Post Office, Under Number QJ / 94 / N/ 87.
Telephone. 24805, 22078

### கூடைப்பந்தாட்ட சாம்பியன்கள்



ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் நிறுவனத்தின் ஆதரவில் யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. நடத்திய கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் சாம்பியன்களாகிய யாழ் கிறீன் பீல்ட் அணியையும், பெண்கள் பிரிவில் சாம்பியன்களாகிய யாழ் பமிலியன்ஸ் அணியையும் படத்தில் காணலாம்.

## யாழ் இந்துவுக்கு இன்னிங்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 20

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை யாழ் இந்துக் கல்லூரி அணி இன்னிங்ஸாலும் 131 ஓட்டங்களாலும் தோற்கடித்தது.

கல்லூரிகளுக்கு இடையேயான 19 வயதுக்குட்பட்டோரின் சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியின் ஒரு கட்டமாக இந்த ஆட்டம் இடம்பெற்றது.

இப்போட்டியில் பிரபானந்தன் மொத்தமாக 48 ஓட்டங்களுக்கு 14 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியது சிறப்பம்சமாகும்.

### ஸ்கோர் விபரம்

**யாழ் இந்து:**

முதலாவது இன்னிங்ஸ் 213 ஓட்டங்கள். கே. பிரேம்நாத் 86 (6 சிக்சர்கள், 7 பவுண்டறிகள்) திலீபன் 57, பிரபானந்தன் 27.

(நித்தியராஜன் 77 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகள், விஜயகுமார் 70 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகள்)

**யாழ்ப்பாணக் கல்லூரி**

முதலாவது இன்னிங்ஸ் 25 ஓட்டங்கள்.

(பிரபானந்தன் 16 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகள்) இரண்டாவது இனிங்ஸ்-56 ஓட்டங்கள். சயந்தகுமார் 13 ஓட்டங்கள்

(பிரபானந்தன் 32 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகள்.)

### இவ்வார ஆட்டங்கள்

இவ்வார ஆட்டங்கள் (பெப். 20, 21)

1. யாழ் இந்து எதிர் சம்பத்திரிசியார் கல்லூரி இடம்: யாழ் இந்து மைதானம்

2. மரியோவான் கல்லூரி எதிர் கொக்குவில் இந்து கல்லூரி. இடம்: கொக்குவில் இந்துமைதானம். (இ-எ)

ஷப்ரு ஆதரவு உதைபந்தாட்டம்:

## இறுதிப் போட்டி இன்று முதல் 3 தினங்களுக்கு

யாழ்ப்பாணம் பெப் 20

ஷப்ரு யுனிக்கோ நிதி நிறுவனத்தின் அனுசரணையுடன் அரியாலை ஐக்கிய கழகம் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையேயான இறுதிச் சுற்று லீக் போட்டி இன்று வெள்ளிக்கிழமை முதல் மூன்று தினங்கள் நடைபெறும்.

இப்போட்டியின் முதற்சுற்று ஆட்டங்கள் முன்னர் நடைபெற்ற போது நான்கு அணிகள் இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகின.

அதைத் தொடர்ந்து இப்போது இறுதிச்சுற்று லீக் அடிப்படையில் நடத்தப்படுகிறது.

போட்டி நடைபெறும் திகதிகளும் கலந்து கொள்ளும் அணிகளும் வருமாறு:-

பெப். 20

★ கிறீன்பீல்ட் எதிர் சென் மேரீஸ் - மாலை 4 மணி

★ சென் அன்ரனிஸ் எதிர் பொற்பதி - மாலை 5 மணி.

பெப். 21

★ கிறீன்பீல்ட் எதிர் சென் அன்ரனிஸ் - மாலை 4 மணி

★ சென் மேரீஸ் எதிர் பொற்பதி - மாலை 5 மணி

பெப். 22

★ சென் அன்ரனிஸ் எதிர் சென் மேரீஸ்- மாலை 4 மணி

★ கிறீன்பீல்ட் எதிர் பொற்பதி - மாலை 5 மணி.

யாழ் உதைபந்தாட்ட லீக்கின் கண்காணிப்பின் கீழ் இந்தச் சுற்றுப் போட்டி அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது. (இ-எ)

### புதிய சுப்ரிண்டன்

யாழ்ப்பாணம், பெப் 20

யாழ். பொலிஸ் சுப்ரிண்டன் பொறலஸ் இன்று முதல் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுச் செல்கிறார்.

இவருடைய இடத்துக்கு கொழும்பில் இருந்து சுயகே தர்மதாச என்பவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

திங்கட்கிழமை முதல் புதிய பொலிஸ் சுபரின்டன் பதவி ஏற்பார் என தெரியவருகிறது.

### கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 20

மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் விரிவுபடுத்தப்பட்ட பொதுச் சபைக் கூட்டம் யாழ் ஸ்ரான்லி வீதியில் உள்ள பட்டப்படிப்புக் கல்லூரியில் இன்று (வெள்ளி) மாலை 4-00 மணிக்கு நடைபெறும்.

அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள பொருளாதாரத் தடை நடவடிக்கைகள், இராணுவ நடவடிக்கைகள் உட்படப் பல்வேறு விடயங்கள் கூட்டத்தில் ஆராயப்படும்.

திரு. தி ஜீவரத்தினம் தலைமையில் கூட்டம் நடைபெறும். (இ)

### பஜனை

யாழ், நல்லூர் சத்திய சாயி சேவா நிலையங்கள் இணைந்து நடத்தும் பஜனை நாளை சனிக்கிழமை மாலை 4 மணியில் இருந்து 6 மணி வரை நல்லை ஆதீனத்தில் நடைபெறும் (உ-எ)

### பிரபுக்கள்---

(1ஆம்பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

இந்தத் தீர்ப்பு அகதிகள் தொடர்பான முக்கிய முடிவுகளை மேற்கொள்ளும் சகல அதிகாரங்களையும் உள்துறை அமைச்சிடம் ஒப்படைத்து விட்டது என்றார் அவர். (உ)

### இனப்பிரச்..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

றனர்

ஆளும்கட்சித் தலைமைப் பீடத்தில் உள்ள மிகப் பெரிய சிரேஷ்ட அரசியல்வாதி இக்குழுவுக்குத் தலைமை வகிக்கின்றார்.

— இப்படி கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (உ-எ)

### ஈழத்தமிழர்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சொன்னதாவது;

அகதிகள் நாடு கடத்தப்படமாட்டார்கள். இலங்கையரை கனடா நாடுகடத்துவது இல்லை

இதனிடையில் அகதிகள் பெரும் எண்ணிக்கையில் நுழைவதைக் கட்டுப் படுத்தும் சட்டங்களைக் கொண்டு வர கனடா நடவடிக்கை எடுத்து வருகிறது

புதிய சட்டவிதிகள் இன்னும் சிலவாரங்களில் தயாராகி விடும் என்று அமைச்சர் பௌச்சார்ட் தெரிவித்தார்.

தமிழ் அகதிகளை மனதில் வைத்து புதிய சட்ட விதிகள் கொண்டு வரப்படவில்லை என்று அமைச்சர் தெரிவித்தார்.

தமிழ் அகதிகள் பிரச்சினை ஒரு புறமிருக்க, அமெரிக்காவில் இருந்து தினமும் நூற்றுக் கணக்காக வந்து குவியும் லத்தீன் அமெரிக்கன் அகதிகள் பிரச்சினைதான் கனடாவிற்கு பெரும் தலைப்பிடியைக்கொடுத்துள்ளது

### ஜே.ஆர்:க்கு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது.

எனவே திரு. ஜெயவர்த்தனவுக்கு கடிதக் குறிப்புக்களை அடிக்கடி அனுப்பிக்கொண்டிராமல் இந்தியா தீர்மானமாகச் செயல்படவேண்டும்.

இப்படி டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி சொன்னார். (உ-எ)

## லால் டெங்கா பதவி ஏற்பு

புதுடில்லி, பெப். 19

மிஸோராம் மாநில முதலமைச்சராக மிஸோ தேசிய விடுதலை முன்னணித் தலைவர் லால் டெங்கா இன்றுவெள்ளி பதவி ஏற்கிறார்.

கிளர்ச்சித் தலைவராக இருந்து மிஸோர மாநில முதலமைச்சராக இடைக்காலத்தில் பணியாற்றிய திரு லால் டெங்கா, இப்போது தான் முதல் தடவையாக தேர்தல் ஒன்றில் வெற்றியீட்டி முதலமைச்சரானார்.

நடந்து முடிந்த 40 உறுப்பினர் சட்டசபைக்கான தேர்தலில் மிஸோ தேசிய முன்னணி 24 ஆசனங்களைக் கைப்பற்றியது.

இந்திரா காங்கிரஸ் 13 தொகுதிகளையும் மக்கள் பேரவைக் கட்சி 3 ஆசனங்களையும் கைப்பற்றின. (உ-எ)

பிரயாண ஒழுங்குகள்

Horizon Enterprises
OPEN VISAS

● ஓமான் ● குவைத்
● சவூதி

உடன் வேலை வாய்ப்பு!

நாம் குறிப்பிட்டபடியே உங்களது பயணத்திற்கான ஒழுங்குகள் செய்துதரப்படும்.

அன்றும், இன்றும் என்றும் எதுவித முரண்பாடுமில்லாது ஒன்பதாவது ஆண்டையும் பூர்த்திசெய்தும் தொடர்ந்தும் கண்ணியமாய் எமது முகவர் நிலையம் வடபகுதியில் முன்னோடியாய் இயங்கிக்கொண்டிருக்கின்றது என்பதனையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

★ எமக்கு வடபகுதியில் வேறு கிளைகள் கிடையாது

பணிப்பெண்களுக்கான பிரயாண ஒழுங்குகள்

மிகவிரைவில் குறைந்த கட்டணத்தில் செய்து தரப்படும்.

லெபனன், அபுதாபி, சிங்கப்பூர், டுபாய் ஆகிய நாடுகளுக்கு

காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை நேரில் தொடர்பு கொள்ளவும்.

கடிதம் மூலம் தொடர்பு கொள்வோர் முத்திரை ஒட்டிய கவருடன் தொடர்பு கொள்ளவும். எமது முகவர் நிலையத்தினூடாக பயணம் மேற்கொண்டோர் விபரம் வாரந்தோறும் வெளியிடுகின்றோம்,

இவ்வாரம் பயணம் மேற்கொள்வோர் பெயர் விபரங்களை அடுத்தவாரம் பத்திரிகையில் காணலாம்.

உங்கள் (PASSPORT) கடவுச் சீட்டுக்கள் குறித்த தவணையில் குறைந்த செலவில் செய்து தரப்படும்

எம்மிடம் (PASSPORT) விண்ணப்பப் படிவமும் எல்லா நாட்டிற்கான சகலவிதமான முத்திரைகளும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ் முகவரி:
A. பத்மதாஸ்
மதுரா வீடியோ கிளப்,
இல 96, 4-ம் குறுக்குத் தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 23549

கொழும்பு முகவரி:
HORIZON ENTERPRISES
No. 87 2/1, Kollupittiya Lane,
Kollupittiya, COLOMBO-3
T-phone: 574000

நீத்தார் பட்டியல்

### செல்லம்மா சபாபதி

திருமதி செல்லம்மா காலமானார். இவர் காலம்சென்ற சங்கானையை பிறப்பிடமாகக் கொண்ட சபாபதியின் அன்பு மனைவியும், செல்லத்துரை (அரச ஓய்வூதியகாரர்), பொன்னுத்துரை (T. O கல்வித் திணைக்களம் யாழ்.), திரவியம்மா, வேலாயுதபிள்ளை (முன்னாள் ஆசிரியர்), கந்தசாமி (கணக்காளர்- சவுதி), சுப்பிரமணியம் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும் வள்ளிகொடி, சித்ரா, காலஞ்சென்ற மயில்வாகனம், சித்ரா, மகேஸ்வரி, சூரியகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்

அன்னாரின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக தாவடி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகிறீர்கள்.

இங்ஙனம்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org